தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியக்குழு
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை – 28

அறிவிப்பு
எண்.3069/ஆஎநநி/2023–1 நாள்.15.02.2023

பொருள் தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியச் சட்டம் 2002– தமிழ் நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியக்குழு – ஆவண எழுத்தர் சங்கங்களின் அங்கீகாரம் மற்றும் பதிவு – விண்ணப்பங்கள் கோரி – அறிவிப்பு வெளியிடுதல் – தொடர்பாக

தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியச் சட்டம் 2022, 02.12.2023 முதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியக்குழு 02.12.2022 முதல் நிறுவப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதியச் சட்டம் 2022ன் பிரிவு 17ன்படி இச்சட்டத்தின் கீழ் அங்கீகாரம் மற்றும் பதிவு பெற விரும்பும் ஆவண எழுத்தர்கள் சங்கங்கள் தங்களது விண்ணப்பங்களை தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் நல நிதிய விதி 2022ன் விதி 3(1)ன் கீழான படிவம் –Iல் பரிந்துரைக்கப்பட்டவாறு உரிய விவரங்களுடனும், தங்களது சங்கத்தின் துணை விதி நகல் மற்றும் உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலுடன், படிவம் I –ஐ 28.02.2023க்குள் தவறாது தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியக்குழுவிடம் அளிக்க அறிவிக்கப்படுகிறது.

மேலும் தங்களது மனுவுடன், ஆவண எழுத்தர்கள் சங்கம் பதிவு செய்யப்பட்டமைக்கான பதிவுச்சான்று மற்றும் நாளதுவரை முறையாக செயல்பட்டு வருகின்றது என்பதற்கான ஆதாரங்களையும் இணைத்தளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. விண்ணப்பங்கள் விடுதல்கள் ஏதுமின்றி முழுமையான வடிவில் அனுப்பப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

16/2/2023

செயலாளர்/
கூடுதல் சீட்டுப்பதிவாளர்
தமிழ்நாடு ஆவண எழுத்தர் நல நிதியக்குழு

16/02/23

பெறுநர்
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்
(இவ்வறிவிப்பினை தங்களது அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டவும், தங்களது ஆட்சி எல்லைக்குட்பட்ட ஆவண எழுத்தர்கள்/ஆவண எழுத்தர் சங்கங்களுக்கு விவரம் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது).
நகல்:CS பிரிவு, (பதிவுத்துறை வலைதளத்தில் அறிவிப்பினை வெளியிட)

Verified by RealEstate ™